Shalom

ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 7 இதழ் : 7 மே – 2011

## கடைசிநாட்களில் நான் (இயேசு) மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.

அப்போஸ்தலர் 2 : 17

ஆசிரியர் **சகோ. வே. தேவதாஸ்**

சுதேச ஊழியர் சாட்சி

# Rev. பிரதாப்சிங் பாரியா




## இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் ! என்னுடைய பெயர் பிரதாப்சிங் பாரியா. நான் இராஜஸ்தான் மாநிலத்தில் குசல்காட் தாலுகாவில் ஹரேந்திரகாட் என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசு கிறிஸ்துவை அறியாமல் மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். காரணமின்றி சண்டைபோடுதல், சாராயம் குடித்தல், பீடி குடித்தல், தம் பாக்கு போடுதல், மந்திர பூஜைகள் செய்தல் போன்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தேன். எங்கள் கிராம மக்களோடு சேர்ந்து நானும் பிற தெய்வங்களை வணங்கி வந்தேன். வியாதி வந்தால் உடனே மந்திரவாதியை தெய்வமாக நினைத்து மந்திரவாதிகளை நாடிச் செல்வோம்.

இந்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்தபோது, எங்கள் குடும்பத்தில் அனைவரும் வியாதிப்பட்டு மிகவும் வேதனைப்பட்டார்கள். இதனால் எங்கள் குடும்பத்தில் சமாதானம் இல்லாமல் இருந்தது. மந்திரம் மற்றும் மருத்துவ கிரியைகள் செய்து அநேக பணங்களை செலவு செய்தும் பலனில்லை. இந்த நேரத்தில் ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. பாவ்ஜி கராசியா எங்கள் வீட்டிற்கு வந்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறினார். ஆனாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் இருந்தோம். ஆனால் பரலோக இராஜ்ஜியத்தைக் குறித்து என்னிடம் அவர் பேசியது எனக்கு பயத்தினைக் கொண்டு வந்தது. சிறிது சிறிதாக எனது வாழ்க்கை மாற ஆரம்பித்தது. அந்த ஊழியர் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டேன். பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு என் உள்ளத்தில் ஏற்படவே என்னுடைய பாவங்களை தேவ சமூகத்தில் அறிக்கை செய்து ஜெபித்து பாவத்தில் இருந்து விடுதலையைப் பெற்றுக் கொண்டேன். தொடர்ந்து குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆராதனையில் தொடர்ந்து கலந்து கொண்டோம். எங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் தெய்வீக சமாதானம் நிலவியது. தொடர்ந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தோம்.

இயேசு கிறிஸ்துவை அறியாமல் அந்தகாரத்தில் வாழ்ந்து வரும் எங்கள் கிராம மக்களுக்கும் இயேசுவை அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையை தேவன் தந்தார். உடனே எனது வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணித்து சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் நாங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus With Us Church - Kovilpatti.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

**"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்"!**

தேவ கிருபையினால் மே மாத மலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்ளுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்கள் மற்றும் தியாகமான ஆதரவுகளின் மூலமாகவும் ஏப்ரல் மாதம் முழுவதும் தேவன் பெரிய காரியங்களைச் செய்துள்ளார். அவருக்கே துதி கனம் மகிமை செலுத்தி, உங்கள் யாவருக்கும் என் நன்றியை கூறுகிறேன்.

தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் விசுவாசிகள், மூப்பர்கள், சபை ஊழியர்கள் என்ற பல்லாயிரம் குடும்பங்கள் இணைந்து 40 நாட்கள் உபவாசித்து ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். அதனைத் தொடர்ந்து குருத்தோலை ஞாயிறு, பெரிய வியாழன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நினைவு கூர்ந்து கிறிஸ்துவின் கூடிய உறவை மேம்படுத்தவும், இன்னும் அவருக்கு சாட்சியாக வாழவும் அர்ப்பணித்தார்கள்.

பெரும்பாலான ஷாலோம் சபைகளில், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பல நூறு பேர்கள் ஞானஸ்நானம் பெற்று முதன் முறையாக பெரிய வியாழனன்று கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! நானும் எனது மனைவி வஹிதாவும் பல சபைகளை இந் நாளில் சந்தித்து உற்சாகப்படுத்த தேவன் கிருபை தந்தார்.

இந்த வருடம் CBC (Children Bible Class) 10 நாட்கள் சுமார் 600 கிராமங்களில் நடத்துவதற்கு 600 CBC பயிற்சியாளர்களுக்கு (Teachers & Directors) பயிற்சி கொடுக்க தேவன் கிருபை தந்தார். பகுதி 1 : ஏப்ரல் 18,19 ஆகிய நாட்களில் குஜராதிலும், ஏப்ரல் 25,26 ஆகிய நாட்களில் மத்தியப்பிரதேசத்திலும், ஏப்ரல் 27,28 ஆகிய நாட்களில் இராஜஸ்தானிலும், பகுதி 2 : ஏப்ரல் 29,30 ஆகிய நாட்களில் இராஜஸ்தானிலும் இரு பிரிவாக பிரித்து நடத்தப்பட்டன. **"ஜீவ வார்த்தை"** என்ற தலைப்பில் 10 நாட்களுக்கான பயிற்சி கையேடு மாணவர் புத்தகம், பாடல்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டது. சுமார் 30,000 பீல் ஆதிவாசி சிறுவர்கள் இதன்

மூலமாக ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். மே மாதம் 2ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெறுவுள்ள 10 நாள் வகுப்புகளும் மிக ஆசீர்வாதமாக அமைய கருத்தாக ஜெபிக்கும்படி அன்பாய் கேட்கிறேன். இந்த 30,000 சிறுவர்கள் மூலமாக அவர்கள் குடும்பங்களில், மற்றும் சபைகளில் எழுப்புதலைக் காணவும், குறிப்பாக அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான சிறப்பு ஊழியங்களும், ஞாயிறு வேதாகம வகுப்புகளும் நடைபெற ஜெபியுங்கள். இந்த சிறவர் ஊழியத்திற்குத் தேவையான நிதி உதவிக்காக ஜெபியுங்கள். ஒரு ஆதிவாசி சிறுவருக்கு CBC –க்காக ரூ. 10 தேவைப்படுகிறது. மொத்தம் இதற்காக ரூபாய் சுமார் 3 லட்சங்கள் தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ஜெபத்துடன் இந்த ஊழியங்களைத் தாங்கும் உங்களையும் உங்கள் குடும்பத்தையும், சபையையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

தேவனுடைய பெரிதான கிருபையினால், குஜராத், தாகோத் பணித்தளத்தில் சிறந்த முறையில் ஒரு Recording Studio அமைக்க தேவன் கிருபை தந்தார். அதற்காக அர்ப்பணித்த ஊழியம் செய்ய வந்துள்ள சகோ. மூடி எபபேனேசர் (Sound Engineer) (செய்யூர்) அவருக்காக தேவனைத் துதிக்கிறோம். இதற்காக சுமார் 2.5 இலட்சங்கள் மதிப்புள்ள உபகரணங்களை வாங்க தேவன் கிருபை தந்தார். பீல் மக்களுக்காக பீலி, பிலோடி, வாகுடி, ஹிந்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பாடல்கள் மற்றும் செய்திகளை பதிவு செய்து சி.டி. மற்றும் கேசட்கள் வெளியிடவும், இதன் மூலம் ஆயிரமாயிரம் கிராமங்களில் உள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய பெலனடையவும் ஜெபியுங்கள்.

மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா, கேப்டாவத், வாவடி, டிக்கிடி, சஜேலி, ஆகிய கிராமங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட பெண்களுக்கான சிறப்பு கூடுகைகளில், சபை மூப்பர்களின் மனைவியர்கள், ஊழியர்களின் மனைவியர்கள் பங்கெடுத்தார்கள். இந்த கூடுகைகளில் எனது மனைவி வஹிதாவை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். இதில் கலந்து கொண்ட அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், விடுதலையையும், தரிசனங்களையும் பெற்றார்கள்.

மத்தியப்பிரதேச ஏரியா Leaders Co-ordinators மற்றும் இராஜஸ்தான் Leaders Co-ordinators –களுக்காகன சிறப்புக் கூடுகைகள் மற்றும் திட்டமிடல் கூடுகைகளும், 31.03.2011 முதல் 07.04.2011 வரை நடத்த தேவன் கிருபை தந்தார். குறிப்பாக 21.04.2011 வியாழனன்று குருத்துவப் பட்டம் பெற்ற 77 போதகர்கள் குடும்பங்களுடன் அந்ததந்த சபையிலிருந்து 3,3

மூப்பர்களுடன் இணைந்து சிறப்பான ஐக்கிய ஆரதனை நடத்தவும், திருமண்டலத்திற்கான பணிகளை விளக்கி, தரிசனங்களை வலுப்படுத்தவும் தேவன் கிருபை தந்தார். இதன் மூலமாக 2020ம் ஆண்டிற்குள்ளாக முழு பீல் மக்களும் இரட்சிக்கப்பட, அனைத்து கிராமங்களும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

***"தேவன் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்.***

**ஆதியாகமம் 49 : 25**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## குஜராத் பணித்தளத்தில் மருத்துவ ஊழியம் செய்ய மருத்துவர் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 19 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது.* நமது ஊழியத்தில் ஷாலோம் சேரிட்டி மிஷன் சமுதாய பணிகளைச் செய்து வருகிறது. இதில் முக்கியமான பணி மருத்துவப் பணியாகும். இதற்காக நமது பணித்தளத்தில் ஷாரோன் நினைவு மருத்துவமனை நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. Sheju அவர்கள் கடந்த ஒரு ஆண்டாக அர்ப்பணித்து ஊழியம் செய்து வந்தார். தற்போது அவர் மேற்படிப்பு படிக்கச் சென்ற காரணத்தினால், மருத்துவமனைக்கு ஒரு ஆண்டு, அல்லது இரண்டு ஆண்டு அல்லது முழுமையாகவோ அர்ப்பணித்து ஊழியம் செய்ய மருத்துவர் தேவை. முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளவும். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக

**தொடர்பு கொள்ள வேண்டிய செல் போன் : 09377445468, 9345675468,**

## உங்கள் கவனத்திற்கு....

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களை தேவன் ஜெபக்கூடுகைகள், வீட்டு ஜெபக் கூடுகைகள், ஞாயிறு ஆராதனைகள், மிஷனெரி தரிசன கூடுகைகள், மற்றும் உபவாச ஜெபங்களில் அநேக இடங்களில் பயன்படுத்தி வருகிறார்.

நீங்களும் உங்களது ஜெபக்கூடுகைகள், வீட்டு கூடுகைகள், உபவாச கூடுகைகள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள், சுவிசேஷக் கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள், மிஷனெரி தரிசனக் கூடுகைகள் ஆகியவற்றில் ஷாலோம் ஊழியர்களைப் பயன்படுத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

தொடர்புக்கு : சகோ. ரதீஸ் குமார், செல் : ***செல் : 9600695598***



# பரிசுத்த ஆவியானவர்

சிறப்புச் செய்தி : சகோதரி **வஹிதா தேவதாஸ்**

**“கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்”**
என்று நமக்கு வாக்களித்த சர்வ வல்லவருடைய நாமத்தில் **வாழ்த்துக்கள்...**

***<u>பரிசுத்த ஆவியானவர் யார்?</u>***

ரோமர் 8:9ல் கூறப்பட்டுள்ளபடி பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியானவர். கிறிஸ்துவினுடைய ஆவியானவர் என்றும் நமக்கு தெளிவாகிறது.

கிறிஸ்துவே ஆவியானவர், கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த பூலோகத்தில் பிறந்து, வளர்ந்து, 3½ வருடங்கள் வல்லமையாய் ஊழியம் செய்தார். சீஷர்களை எழுப்பி உருவாக்கினார். கடைசியில் அவருடைய 3½ வருட ஊழியத்தை முடித்து மரணத்திற்கு ஆயத்தமாகும்போது, சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவர் பற்றி கூறினார். ஏனென்றால் சீஷர்கள் கலங்கினார்கள். இனிமேல் யார் எங்களோடு கூட இருப்பார்? யார் இப்படி அற்புத அடையாளங்களைச் செய்வார்? என்று திகைத்துப் போனார்கள்.

அப்பொழுதான் இயேசு சொன்னார் யோவான் 14ம் அதிகாரத்தில் “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக” என்றும், 16–ம் வசனத்தில் என்றென்றைக்கும் “உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அனுப்புவேன்” என்றும், 17–ம் வசனத்தில் “அவர் (பரிசுத்த ஆவியானவர்) உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பார்” என்றும் பலவாறு பரிசுத்த ஆவியானவர் பற்றி கூறி சீஷர்களை தேற்றினார் மட்டுமல்லாமல் இயேசுவானவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின்பும், யோவான் – 20 : 22–ல் அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ளுங்கள் என்று எவ்வளவு வாஞ்சையாய் இயேசு கூறியிருக்கிறார் பாருங்கள்!. நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்பது தான் உயிர்த்தெழுந்த இயேசுவின் வாஞ்சை. பிரியமானவர்களே,

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வரும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன என்று பார்ப்போம்.

**முதலாவதாக நாம் தேவனுடைய ஆலயமாகிறோம். (1கொரி. 3:16-17.)**

> நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?
>
> ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.
>
> தேவனுடைய ஆவி நமக்குள் வாசமாயிருக்கும் போது, நம்முடைய இருதயம் ஆலயமாகிறது. நமது இருதயமாகிய ஆலயம் பரிசுத்தமாய் பாதுகாக்கப்பட வேண்டும். பரிசுத்தமாய் பாதுகாக்கும்படியாக பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறார்.

❖ **எப்படி நம் இருதயம் தேவனுடைய ஆலயமாகிறது?**

முதலாவதாக எரேமியா – 19:9 இவ்வாறு கூறுகிறது “இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது”. ஆகையால் தான் மனிதருடைய இருதயத்தை பாவம், அசுத்தம், கெட்ட சுபாவங்கள் நிறைக்கப்பட்டு தேவனுடைய ஆலயம் கெடுக்கப்படுகிறது. இயேசுவின் இரத்தம் நம்மை பழைய பாவங்களில் இருந்து கழுவி சுத்திகரிக்கிறது. இயேசுவின் இரத்தத்தினால் நமது இருதயம் கழுவப்பட்டால் தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ண முடியும். பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் வாசம் பண்ணும்போது தான் நாம் அவருடைய ஆலயமாக இருக்க முடியும்.

இரண்டாவதாக, நவமான இருதயம், மற்றும் புதிதான ஆவியை தருகிறார். எசேக்கியேல் 36:26,27–ல் “கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை தருகிறார்.” நவமான இருதயத்தைக் கொடுத்து, புதிதான ஆவியைக் கட்டளையிடுகிறார். உள்ளத்திலே என் ஆவியை வைத்து, அவருடைய கட்டளைகளில் நடக்கவும், நியாயங்களைக் கைக்கொள்ளவும், அவைகளின்படி செய்யவும் பண்ணுகிறார். யோவான்–16:8ல் “பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார்”.என்று வேதம் கூறுகிறது.

❖ **இரண்டாவதாக நாம் விடுதலையாகிறோம். 2 கொரி. 3:17**

ஆவியானவர் எங்கு உண்டோ, அங்கு விடுதலை உண்டு... ஆவியானவர் நமக்குள்

வரும்போது நாம் பாவம், சாபம், வியாதி, பிசாசு இவற்றில் இருந்து விடுதலை பெற்றவர்களாக வாழ்கிறோம். ரோமர் 8:11—ல் இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:2 இவ்வாறு கூறுகிறது, ஆவியின் பிரமாணம் என்னை பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்று. பீல் மக்கள் மிகவும் குடிகாரர்கள். 24 மணிநேரமும் குடித்து கொண்டேயிருப்பார்கள் மட்டுமல்ல கொள்ளையடிப்பவர்கள், பில்லிசூனியத்திற்கு அடிமையானவர்கள். இப்பொழுது இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். தீராத குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஆவியானவர் எங்கு உண்டோ அங்கு விடுதலை உண்டு.

பீல் மக்கள் இறந்தவர்களின் ஆவியை வணங்கி மற்றும் மந்திர பூஜைகளை செய்வது மட்டுமல்லாமல், கொள்ளையடித்து இவர்கள் சாபத்துக்குள்ளாகி வாழ்ந்தார்கள். இன்று இயேசு இவர்கள் வாழ்க்கையில் பிரவேசித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானரின் அருள்மாரி ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. சுமார் 20,000 குடும்பங்கள் சாபங்களினின்று விடுதலை பெற்று தேவனை துதிக்கிறார்கள். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் ஷாலோம் ஊழியர்களை தேடிவந்து ஜெபித்தவர்கள் வியாதியிலிருந்து விடுதலை பெற்றது மட்டுமல்லாமல், விடுதலையோடு சாட்சியாய் வாழ்ந்து வருகிறார்கள். இதற்கு காரணம் பரிசுத்த ஆவியானவர் இவர்களுக்குள் தங்கி வாசம் பண்ணுகிறார்.

பலவிதமான அசுத்த ஆவியினாலும் பில்லிசூனியங்களினாலும் அலைக்கழிக்கப்பட்ட இந்த மக்கள் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்று, ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்று, பிசாசை மேற்கொண்டு வல்லமையோடு பயமின்றி வாழ்கிறார்கள். ஆவியானவர் எங்கே உண்டோ அங்கு விடுதலை உண்டு.

❖ **மூன்றாவதாக நாம் பெலனடைகிறோம். அப். 1:8**

“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து” என்று வாசிக்கிறோம்.

**சாட்சியாய் வாழும் பெலன்**

நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். இந்த உன்னதமான பெலன் இல்லையென்றால் பாவமான உலகில் நாம் சாட்சியாய் வாழ்வது என்பது மிகவும் கடினமான காரியம். கிறிஸ்தவர்கள்

என்று எல்லோராலும் அறியப்படுகிற நாம் அந்த மரியாதையை காப்பாற்றுகிறவர்களாக கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ்ந்து காட்ட வேண்டும். மனுஷர் நம்முடைய நற்கிரியைகளை கண்டு, பரலோகத்திலிருக்கிற பிதாவை மகிமைப் படுத்தும்படியாக நம்முடைய வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்க வேண்டும். நம்முடைய வெளிச்சம் என்பது, நாம் ஆவியின் கனிகளில் கூறப்பட்டுள்ள ஒன்பது சுபாவங்களால் நிறைந்து கிறிஸ்துவின் சுபாவம் நம்மில் வெளிப்பட வேண்டும். அப்படிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கை வாழும்படியாகத்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் ஊற்றப்படுகிறார்.

**சாட்சியாய் நிற்கும் பெலன் :**

நாம் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும். நம்முடைய குடும்பத்திலும், வேலை பார்க்கிற ஸ்தலத்திலும், ஊழிய ஸ்தலத்திலும், நாம் வாழ்கின்ற இடத்திலும் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும். இன்று கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும் என்றால் அந்த உன்னத பெலத்தினால் நிரப்பப்படவேண்டும். அன்று ஸ்தேவான் சபையின் மூப்பராக இருந்து எவ்வளவாய் வைராக்கியத்தோடு கிறிஸ்துவுக்கு சாட்சியாய் அவன் நின்றான் என்பதை அப். 7–ம் அதிகாரத்தில் நாம் பார்க்கலாம். அவன் சாட்சியாய் நின்று தன் ஜீவனையும் துச்சமாய் எண்ணினான். காரணம் அவனுக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவர் தான். அப்போஸ்தலர் 7:55 வாசித்தால், அவன் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அந்த நேரத்தில் மக்கள் முன்பு நின்றான் என்று பார்க்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் குஜராத்தில் பாவ்கா என்ற கிராமத்தில் விசுவாசிகளுக்கு விரோதமாய் புற இன நண்பர்கள் எழும்பி மிக கடினமாய் எதிர்ப்பு தெரிவித்து பெரிய பிரச்சினையாய் மாறிவிட்டது. காவல் துறையினர் ஒரு மாதமாக அந்த காரியத்திற்கு சரியான நடவடிக்கை எடுக்காதபடியினால் கிராமத்தில் கிறிஸ்தவர்கள் மிகவும் வேதனையை அனுபவித்தார்கள். ஆனால் இவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாய் இறங்கினார். 35 குடும்பங்களும் போலீஸ் அதிகாரியைச் சந்தித்து பேசி "எங்களை வேதனைப் படுத்தாதீர்கள். இந்த நேரமே எங்களை சுட்டுக் கொன்று விடுங்கள். நாங்கள் இந்த நிமிடமே எங்கள் இயேசுவிடம் சென்று சமாதானமாய் இருப்போம். நீங்கள் எங்கள் உடைமைகளையும், சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்". என்று வைராக்கியமாய் கூறினதை பார்த்து அந்த போலீஸ் அதிகாரி மிகுந்த வியப்புடன் உங்களுக்கு பின்னால் யாரோ ஒரு பெரியவர் இருக்கிறார் என்றார். அதற்கு விசுவாசிகள் கூறின பதில் என்ன தெரியுமா? எங்களுக்கு பின்னால் யாருமில்லை, எங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று கூறினார்கள். இவர்களுக்குள் இருக்கிற சாட்சியான வாழ்க்கையைப் பார்த்த அதிகாரி

உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். இன்று புதுப்பிக்கப்பட்ட ஆலயமாக அநேக ஆத்துமாக்களுடன் வளர்ந்து வருகிறது. சாட்சியாய் நிற்கும் பெலனை தருபவர் நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர்தான்.

**சாட்சியை அறிவிக்கும் பெலன் :**

நாம் பெற்ற இரட்சிப்பை சாட்சியாய் அறிவிக்கும்படியாய் பரிசுத்த ஆவியானவர் பெலன் தருகிறார். நாம் பரம்பரையாய் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் நாம் கூடி இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க பயம், வெட்கம் உண்டாகிறது. அந்த பயம், வெட்கம் நீங்கி இயேசுவே தேவன் என்று நாம் அறிவிக்கும்படியான பெலனை பரிசுத்த ஆவியானவர் தருகிறார். எடுத்துக்காட்டாக, இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டபோது, சீஷர்கள் மிகவும் பயந்தவர்களாய் தங்கியிருந்த அறையின் கதவு ஜன்னல்களை பூட்டி வைத்திருந்தார்கள். பயம் ஆட்கொண்டது. பேதுரு மூன்று தடவை மறுதலித்து விட்டான். இயேசுவோடுகூடி இருந்த பேதுருவுக்கே பயம் ஆட்கொண்டுவிட்டது. மட்டுமல்லாமல் சீஷர்கள் கதவை பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் என்றைக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்களோ, உடனடியாக அவர்களுக்குள் இருந்த பயம் நீக்கப்பட்டது. இயேசுவை மறுதலித்த பேதுருவே மிகவும் வைராக்கியமாய் எழும்பி, ரோமாபுரியார், யூதர், கிரேக்கர், அரபியர் யாவருக்கும் முன்பாக எழும்பி உரத்த சத்தமாய் இயேசுவை பற்றிக் கூறி அப். 2:32–ல் “இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்”. என்ற சாட்சி கூறினார். அன்றைய தினமே (அப். 2:41) 3000 பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். இயேசுவை சாட்சியாய் அறிவிக்கும் பெலன் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற பின்பு தான் கிடைத்தது. மட்டுமல்லாமல் உடனே பிறவி சப்பாணியை இயேசுவின் நாமத்தில் நடக்கும்படியான அற்புதத்தை செய்து இயேசுவை வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியனவர் நமக்குள் வரும்போது நாம் அவருடைய ஆலயமாகிறோம். நாம் விடுதலையடைகிறோம். நாம் பெலனடைகிறோம். இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரை நாம் வாஞ்சித்து பெற்று கொள்வோமாக!

“உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதங்களையும் ஊற்றுவேன்.” ஏசா. 44:3. என்ற வாக்கின்படி 2008ல் உங்கள் மீதும், உங்கள் சந்ததியின் மீதும் தேவன் வல்லமையாக இறங்கி ஒவ்வொருவரையும் நிரப்பி ஆசீர்வதிப்பாராக!

*"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்;*
*இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.* ஏசாயா 43 : 21

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| 07.05.2011, சனிக்கிழமை | மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்



*தேவ செய்தி:*
***சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்***
அன்பு பகிர்வு இயக்கம், தூத்துக்குடி.

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## குஜராத் பணித்தளத்தில் ஊழியம் செய்ய சமையல்காரர் தேவை


*தேவ கிருபையினால் கடந்த 19 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது.*

தமிழ்நாட்டிலிருந்து, ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, குஜராத் தாகோத் பணித்தளத்தில் தங்கியிருந்து அநேக தேவ பிள்ளைகள் ஊழியம் செய்து வருகிறார்கள். இதில் திருமணமாகாமல் இருக்கும் தேவ பிள்ளைகளுக்கும் சமையல் செய்வதற்கு ஊழிய அர்ப்பணிப்புள்ள ஆண் அல்லது பெண் தேவை.

முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளவும். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக

தொடர்பு கொள்ள வேண்டிய செல் போன் : **09377445468, 9345675468,**

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி (Key) வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

---

## *தேர்தலுக்காய் துதிப்போம்! ஜெபிப்போம்!!*



கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தேவன் நமது ஜெபங்களைக் கேட்டு, நமது தமிழக சட்டசபை தேர்தலை மிகவும் அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்தித் தந்தார், இதற்காக தேவனைத் துதியுங்கள்!

மேலும் மே 13ம் தேதி நடக்கவிருக்கும் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்காக மறவாமல் ஜெபியுங்கள். வாக்கு எண்ணிக்கை எந்தவித வன்முறையும், இல்லாமல் அமைதியான முறையில் நடக்கவும். தேவன் தமக்குச் சித்தமான தலைவர்களை ஆட்சியில் அமர்த்தவும், அந்த தலைவர்கள் உண்மையும் உத்தமமுமாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காவும், தமிழக மக்களுக்காகவும் உழைக்கவும் மறவாமல் ஜெபியுங்கள். நமது ஜெபங்களைக் கேட்டு கர்த்தர்தாமே பெரிய காரியங்களைச் செய்வாராக!

# SHALOM CHARITY MISSION

## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission –** என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission –** என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# CBC (Children Bible Class - 2011)



ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான CBC நடத்தப்பட்டு வருகிறது.

❖ 2008ஆம் ஆண்டில் "இயேசுவே இரட்சகர்" என்றதலைப்பில் 17,000 சிறுவர்களும்

❖ 2009ஆம் ஆண்டில்"விசுவாசமே ஜெயம்" என்றதலைப்பில் 20000 சிறுவர்களும்,

❖ 2010ஆம் ஆண்டில் "நல்ல போதகர் இயேசு" என்ற தலைப்பில் 25000 சிறுவர்களும்

பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம்

**"ஜீவ வார்த்தை"** என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

## இதற்கான தேவைகள்:–

1. 600 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்

2. 30000 CBC புத்தகங்கள். 3. Badge. (30000)

4. பாட்டு புத்தகங்கள் (10,000) 5. கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets)

CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 10/– வீதம் 30000 குழந்தைகளுக்கு ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இதுவரை இதற்காக **ரூ. 88,000/–** கிடைக்கப்பெற்றுள்ளோம். மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ **ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




CBC பயிற்சி புத்தகங்கள்



CBC ஆசிரியர் பயிற்சியில்

**"மிகவும் சிறியவராகிய..... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"** மத். 25:40

# ஷாலோம் ஒரு முன் மாதிரியான ஊழியம்

நமது ஷாலோம் ஊழியங்களை தேவன் பல ஊழிய ஸ்தாபனங்களுக்கு முன் மாதிரியான ஊழியமாக வழி நடத்தி வருகிறதற்காக தேவனைத் துதிக்கிறோம். நமது ஊழியங்களை முன் மாதிரியாக வைத்து சில பயிற்சிகள் பெற வந்த ஊழிய ஸ்தாபனங்களின் தலைவர்கள் நமது ஊழியங்களைக் குறித்து கூறுவது....



**Bro. Sudandarasingh**
(Founder - WMF)

நாங்கள் World Mission Foundation (WMF) ஊழியத்தின் தலைவர்கள் மற்றும் பயிற்சி கொடுக்கும் தலைவர்களாக 30–3–11 முதல் 6–4–11 வரை குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் பயிற்சிக் கூடத்தில் தங்கியிருந்து பயிற்சி கொடுத்தோம். நாங்கள் ஷாலோம் ஊழியத்தினை தெரிந்தெடுத்ததற்குக் காரணம், இந்த ஊழியத்தின் தரிசனமும், தரிசனத்தை நிறைவேற்ற அவர்கள் எடுக்கும் திட்டங்களும் எங்களை மிகவும் கவர்ந்தன. ஷாலோம் ஊழியத்தில் தரிசனம் பெற்றதுமல்லாமல், திட்டங்களை செயல்படுத்தி வெற்றி பெற்றுள்ளார்கள். Bishop. Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்களும் அவரது துணைவியார் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் தாங்கள் பெற்ற தரிசனத்தை அநேக பாடுகளோடும், வேதனைகளோடும் நிறைவேற்றி வருகிறன்றார்கள். அவர்களின் தரிசனம் முழு பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். இதுவரை அவர்கள் 650க்கும் அதிகமான இடங்களில் ஆராதனை குழுக்களையும், 250க்கும் அதிகமான சபைகளையும் ஏற்படுத்தியுள்ளனர், மேலும் 450க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை உருவாக்கியுள்ளனர்.

WFM - ன் தரிசனம் உலகில் சுவிஷேசம் அதிகம் அறிவிக்கப்படாத 17 நாடுகளில் (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, ஜப்பான் மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகள்) தரிசனமுள்ள தலைவர்களை உருவாக்குவது. தற்சமயம் நாங்கள் முழு மூச்சுடன் 1000 சபைகளை உருவாக்கக்கூடிய 100 தலைவர்களை உருவாக்க பயிற்சி அளித்து வருகின்றோம். அதற்கான ஒரு கட்ட பயிற்சி தான் இங்கு நடைபெற்றது. இதில் இந்தியாவில் ஊழியம் செய்கின்ற 8 ஊழிய ஸ்தாபனங்களின் தலைவர்கள் வந்து பயிற்சி பெற்று சென்றனர். நாங்கள் முக்கியமாக 10 ஆண்டுகளில் எப்படி 1000 சபையை உருவாக்குவது என்று பயிற்சி அளிக்கின்றோம். அதாவது நெகேமியாவைப் போல 5 வருட வேலையை எப்படி 52 நாளில் முடிப்பது என்பதை கற்றுக்கொடுக்கின்றோம். இதற்காக



சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பயிற்சியளிக்கிறார்கள்

இந்தியாவிலும் இந்தியாவின் வெளியிலும் சபைகளை நிறுவக்கூடிய தலைவர்களை உருவாக்ககூடியவர்களை பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஷாலோம் ஊழியம் எங்களுக்கு வாய்ப்பு வழங்கியது மட்டுமல்லாமல் பிஷப் தேவதாஸ் அவர்கள் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் கடந்த 20 வருடங்களில் எப்படி ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றோம் என்று வேத வசனங்களின் வழியாகவும் தங்கள் அனுபவத்தின் வழியாகவும் வந்திருந்த அனைவருக்கும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்த பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்களின் ஒரு சிலரின் அனுபவத்தை கீழே கொடுத்துள்ளோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.

***Bro. Sudandarasingh***

(Founder - WMF)

## *Rev. Ajay Jogi*

**President, House of God Ministries,**

**Bilai, Chattisgarh.**

பிஷப் தேவதாஸ் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தரிசனம், தெய்வீக தரிசனம். மிகவும் தெளிவான ஒரு மக்கள் கூட்டத்தை குறித்ததாகும். ஆகவே அவர்களுக்கு தரிசன சிதறல் ஏற்பட வழியேயில்லை.



பிஷப் தேவதாஸ் அவர்களின் எளிமையான பரிசுத்த வாழ்க்கை அவரை பின்பற்றுகிறவர்களாகிய எங்களுக்கும் மிகவும் பிரயோஜனமாக உள்ளது. அடுத்ததாக இந்த ஊழியம் ஜெபத்தில் தான் நிலை நிற்கின்றது என்பது மிகவும் தெளிவாக புரிகின்றது. மேலும் இவர்கள் கடின உழைப்பாலும் மிகுந்த பாடுகளின் மத்தியிலும் எல்லாவற்றிற்கும் மேலாக தேவ கிருபையினாலும் இந்த ஊழியத்தினை இந்த அளவிற்கு கொண்டு வந்துள்ளார்கள் என்பதை, இந்த பீல் மக்கள் மத்தியில் உள்ள எழுப்புதல்களிருந்து தெரிகின்றது.

## *Pas. Ram Prasad Sahu*

**Glorious Social Development Society, Balaghat, M.P.**

இந்த ஷாலோம் ஊழியத்தின் ஆராதனை முறை (கலாச்சாரத்தின்படி) சபை தலைவர்களை உருவாக்குவது, ஆதிவாசி மக்களின் மொழியிலேயே ஆராதனையை நடத்துவது என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. மிகவும் தாழ்மையான உள்ளூர் சபை பீல் தலைவர்களின் வழியாக அநேக ஆத்துமாக்கள் வந்துள்ளனர். ஷாலோம் ஊழியம் ஒரு கூட்ட ஜனங்களை மட்டும் மையமாக வைத்து ஊழியம் செய்வது எனக்கு மிகவும் சவாலாக இருந்தது. மேலும் இவர்கள் சமுதாய முன்னேற்றப் பணியிலும் ஈடுபட்டு ஜனங்களின் தனிப்பட்ட, மற்றும் குடும்ப தேவைகளையும் சந்திக்கின்றனர். இந்த ஷாலோம் ஊழியத்தினைப் பார்த்த நான், ஊழியம்



செய்கின்ற Balaghat, Mandala மாவட்டத்தில் உள்ள Beiga ஜனங்கள் மத்தியில் எனது ஊழியத்தினை ஆரம்பிக்க திட்டமிட்டு, ஜெபித்து வருகிறேன்.

## *Rev. Pankajlal Bardhan*

**Director - Love One Another Ministry (LOAM)**

**Jammu Kashmir.**

1. ஷாலோம் ஊழியத்தில் ஒரு ஜாதி ஜனங்களை ஆண்டவருக்குள் வழிநடத்த வேண்டும் என்ற தரிசனம், நான் ஊழியம் செய்கின்ற ஜம்மு–காஷ்மிரில் உள்ள Bhagat மற்றும் Masa ஜனங்களை தேவனிடம் வழி நடத்த வேண்டும் என்ற பாரம் தந்துள்ளார்.
2. ஷாலோம் ஊழியர்கள் மிகவும் திட்டமிட்டு உள்ளூர் தலைவர்களை, ஊழியராக எழுப்பி அவர்களை Regional Co-ordinator, Area Leader மற்றும் Local Committee வழியாக ஊழியம் செய்வது, வட மாநிலத்தில் ஊழியம் செய்ய ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.
3. ஊழியர்களுக்கு கொடுக்கும் பயிற்சியும் மிகவும் எடுத்துக்காட்டாக உள்ளது.
4. ஷாலோம் தலைவர்கள் ஜனங்களை அவர்கள் கலாச்சாரத்தில் தேவனை ஆராதிக்க ஊக்குவிப்பது மிகவும் பாராட்டப்பட தக்கது.
5. சிறுவர்களுக்கு தனி ஊழியம், வாலிபர்களுக்கு தனி ஊழியம் இவையெல்லாம் சபை வளர்வதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.
6. ஷாலோம் ஊழியம் விசுவாசிகளின் சமுதாய வாழ்வில் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு, Medical Camp, Education & Hostels ஆகியவை செயல்பட்டு வருகிறது. இது ஒரு முழு வளர்ச்சியை காட்டுகிறது.

## *Rev. Abhishek Samuel*

**Prartana Sadan Church & Telugu Baptist Church,**

**Jabalpur, Madhya Pradesh**

1. ஷாலோம் ஊழியம் பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதலை கொண்டு வந்திருக்கிறது.
2. ஷாலோம் ஊழியம் தரிசனத்தை தெளிவாக செயல்படுத்துகிறது.
3. ஷாலோம் ஊழியத்தின் விசுவாசிகள் ஏழைகள். ஆனால் ஆண்டவருக்கு கொடுக்க அறிந்தவர்கள்.
4. நாங்கள் பார்த்த ஒரு முக்கிய காரியம், ஷாலோம் ஊழியத்தில் பெண்களும் தலைவர்களாக உருவாக்கப்பட்டுள்ளார்கள்.



# ஆதிவாசி சிறுவர்களின் கல்விப் பணிக்கான அவசியங்கள்

கிறிஸ்துவின் பணி என்பது வெறும் சுவிஷேசத்தை அறிவிப்பது மட்டுமன்று வாழ்க்கையில் அனைத்து பகுதியிலும் தேவையான மாற்றத்தைக் கொண்டு வருவதாகும். நம் மத்தியில் வந்த மேற்கத்திய மிஷனெரிகள் சுவிசேஷப் பணியோடு கல்விப்பணியையும் செவ்வனே செய்ததால் நம் அனைவரின் சந்ததியும் சமுதாயத்தில் தலைசிறந்து காணப்படுகிறது. அதனைப் போன்றே பீல் ஆதிவாசிகள் மத்தியில் சுவிசேஷ விதை தூவுகின்ற அதே வேளையில் கல்விப்பணியையும் செய்ய வேண்டியது நமது கடமையாகும்

- நாம் தேவனுடைய சித்தத்தினை நிறைவேற்றும் பீல் ஆதிவாசி மக்களின் எழுத்தறிவு வெறும் 28 % மட்டுமே. ஒரு ஆலயத்திற்கு சென்றால் ஒருவர் அல்லது இருவர் மாத்திரமே எழுதப்படிக்க தெரிந்தவராயிருப்பார். அதற்கான காரணங்கள் கல்வியறிவைக் குறித்த விழிப்புணர்வு பீல் ஆதிவாசி மக்களுக்கு மிகவும் குறைவு. பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதைக் காட்டிலும் கூலி வேலைக்கு அனுப்புவதே சிறந்தது என்று நினைப்பர்.
- இங்கு கிராமங்களிலுள்ள பள்ளிகளின் தரம் மிகவும் குறைந்தவை. பெரும்பாலும் ஆசிரியர்கள் பள்ளிக்கூடம் வருவதில்லை. வந்தாலும் பாடங்களை சொல்லித் தருவதில்லை. 7ம் வகுப்பு படித்தவர்கள் கூட வாக்கியங்களை வாசிப்பது மிகவும் கடினம்.
- மேலும் மிகவும் குறைவான எண்ணிக்கையிலே பள்ளிக்கூடங்கள் காணப்படுகின்றன. மேலும் அநேக பள்ளிக்கூடங்கள் ஆரம்ப நிலைப் பள்ளிக் கூடங்களாகவே உள்ளன. நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளிகளுக்கு பல மைல் தூரம் நடந்து சென்று படிக்க வேண்டியுள்ளது. இதனால் இடைவிலகல் (School Dropout) ஆரம்ப பள்ளி அளவில் 50 % இருக்கிறது. இதே நிலை மேல் வகுப்பிற்கு செல்லும்போது 95 % சென்று விடுகின்றது. ஒரு முழு மாவட்டத்திலும் 2 அல்லது 3 கல்லூரிக்கு மேல் காண்பது மிகவும் அரிது.
- பீல் ஆதிவாசி மக்கள் பெரும்பாலும் விவசாயத்தினையே நம்பி வாழ்கின்றனர். மழை இல்லாத நாட்களில் விவசாயம் நடைபெறாத காலங்களில், ஜனங்கள் கூலி வேலை செய்வதற்காக நகரங்களுக்கு குடி பெயர்கின்றனர். இத்தகைய சூழ்நிலைகளில் குடும்பத்திலுள்ள சிறுவர்களையும் கவனிப்பதற்கு ஆள் இல்லாத நிலையில் அவர்களையும் கூலி வேலை செய்வதற்கு அழைத்துச் செல்கின்றனர். மேலும் கைக் குழந்தைகளை கவனிப்பதற்கு பெரிய குழந்தைகள் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் கல்வி கேள்விக்குறியாகி விடுகிறது.
- மேலும் கல்வி செலவு மிகவும் அதிகமான இந்நாட்களில் ஆதிவாசி மக்களால் எந்தவிதமான செலவுகளையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. மேற்கூறிய காரணங்களோடு கூட சிறுவயது திருமணம், குழந்தை தொழிலாளி போன்றவைகளினால் ஆதிவாசி சிறுவர்கள் தலைமுறைத் தலைமுறையாக படிக்காமல் பாமர மக்களாய் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு கல்வி தருவது நம்மீது விழுந்த தலையாய கடமையாகும்.

இதற்காக ஷாலோம் ஊழியத்தின் மூலமாக 10 இடங்களில் விடுதியையும் ஒரு பள்ளிக்கூடத்தையும் அமைத்து செயல்படுத்தி வருகிறோம். இவைகளின் மூலமாக 808க்கும் அதிகமான சிறுவர்கள் கல்வியறிவைப் பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு மாதந்தோறும் குறைந்தது ரூ. 500/- பராமரிப்பு மற்றும் கல்விச் செலவிற்கு தேவைப்படுகிறது. மொத்தமுள்ள மாணவர்களில் 250 பேருக்கு ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் இன்னும் கிடையாது. இந்த குழந்தைகளுக்கான ஆதரவாளர்களை உங்களில் ஜெபத்துடன் எதிர்பார்க்கிறோம்.

மேலும் புதிய கல்வி ஆண்டில் பிரவேசிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் பள்ளிக் கட்டணம், சீருடை, புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 500 /– வீதம் 4,04,000 /– தேவைப்படுகிறது. உங்களால் இயன்ற அளவிற்கு இந்தக் காரியத்தில் உதவ அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் நம்முடைய சுதேச ஊழியர்களுடைய குழந்தைகளில் கல்வியில் சிறந்தவர்கள் (முதல் தலைமுறை ஆதிவாசி கிறிஸ்தவ சிறுவர்கள்) மிக அதிகமான மதிப்பெண்கள் பெற்று பொறியியல், மருத்துவம், ஆசிரியர் பயிற்சி, கல்லூரி படிப்புகளில் சேர்ந்துள்ளார்கள். கடந்த வருடம் மாத்திரம் 35க்கும் அதிகமானோர் இத்தகைய படிப்பிற்கு சென்றுள்ளார். இவர்களுக்கு கல்வி செலவு மிகவும் அதிகமாகிறது. குறைந்தது ஒரு வருடத்திற்கு ரூ. 10,000/- லிருந்து 50,000/– வரை செலவாகிறது. இதற்காக உதாரத்துவமாக கொடுக்கிறவர்களை வேண்டி நிற்கிறோம்.

மிஷனெரிகள் வந்து நமக்கு கல்விப்பணி தராவிட்டால் நாமும் முன்னேற்றம் அடையாமலேயே இருந்திருப்போம். மிஷனெரிகளிடம் கல்வி பெற்ற நாமும் மிஷனெரி பணிக்கும், கல்விப் பணிக்கும் அதிகமாக கொடுக்க கடமைபட்டுள்ளோம். எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டதோ அவனிடம் அதிகம் கேட்கப்படும் என்ற வசனத்தின்படி நாம் நம்முடைய கடமையை உணர்ந்து உதவி செய்வோம். பரலோகத்தில் நமது பலன் மிகுதியாயிருக்கம்.



## மார்த்தாண்டத்தில் ஷாலோம் சுதேச ஊழியர் பிரதிஷ்டை



சுதேச ஊழியர் பிரதிஷ்டை வேளை




சுதேச ஊழியரின் சாட்சி வேளை



ஊழியரைத் தாங்கும் குடும்பத்தினர்



கூடியிருந்த தேவ ஜனங்கள்

## பணித்தளத்தில் புதிதாக செயல்படும் ஒலிப்பதிவு அரங்கு

06.04.2011 அன்று நமது பணித்தளத்தில் Recording Studio பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த Recording Studio –வில் தேவ நாம மகிமைக்காக ஈஸ்டர் பாடல்கள் பதிவு செய்யவும், சிறுவர் ஊழியங்களுக்கு பாடல்கள் பதிவு செய்யவும் தேவையாக இருந்தது. இந்தத் தேவைக்காக அநேக ஆண்டுகளாக ஜெபித்து வந்தோம். தேவன்தாமே ஜெபத்திற்கு பதில் தந்து, இதற்கான உபகரணங்கள் வாங்க தேவன் கிருபை தந்தார். இதற்காக உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இதன் பணிகளை செய்ய சகோ. J. மூடி எபனேசர் அவர்கள் ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்து வந்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை!



உபகரணங்களுக்கான பிரதிஷ்டை
Rt. Rev. Dr. V. தேவதாஸ் & சகோதரி வஹிதா தேவதாஸ்



உபகரணங்களுடன் சகோ. எபனேசர் மூடி அவர்கள்

# பெண்களுக்கான சிறப்புக் கூடுகைகள்



சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுக்கு கலாச்சார வரவேற்பு



பாடல் வேளை



ஆடல் பாடலுடன் ஆராதனை



செய்தி வேளையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்





தேவன் தங்களுக்குக் கொடுத்த சுகத்திற்காக தேவனுக்கு மகிமை செலுத்தி சாட்சி கூறும் பெண்கள்





கூடியிருந்த பெண்கள் கூட்டம்

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்தி பணியில் உங்கள் பங்கு

- ரூ. 2000/– மாதந்தோறும் அனுப்பி சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- ரூ. 1000/– செலுத்தி (ஒருமுறை) ஷாலோம் ஆயுட்கால அங்கத்தினராக(Shalom Life Time Partner) இணையலாம்.
- மாதம் ரூ. 500/– செலுத்தி கிராம ஊழியத்தைத் தாங்க முன் வரலாம். (Shalom Mission Partner)
- சுதேச ஊழியர்களுக்கு மிதிவண்டிகள் (Cycle) வாங்கிக் கொடுக்க முன் வரலாம் ( 1 சைக்கிளின் விலை ரூ.3000/– )
- சுதேச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் (Bike) வாங்கிக் கொடுக்க முன் வரலாம் ( 1 Bike – ன் விலை ரூ. 40,000/– )
- ரூ. 500/– மாதந்தோறும் அனுப்பி ஒரு ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். (1ஆண்டிற்கு 6,000)
- ரூ. 1,00,000/– or ரூ. 2,00,000/– நிதி உதவி தந்து கிராம ஆலயம் கட்டித் தர முன் வரலாம்.
- பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்க முன்வரலாம் (1 வேதாகமத்தின் விலை ரூ. 80/–)
- மாதந்தோறும் முடிந்த காணிக்கையை அனுப்பி ஊழியத்தை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- ஷாலோம் மிஷனெரி பணிக்கு உங்கள் பகுதியில் பிரதிநிதியாக, முன்னேற்றப்பணி செய்ய முன் வரலாம்.

ஜெப உதவிக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்....


**HEAD OFFICE**

SHARING LOVE MISSION

5/168, CALDWELL COLONY, 3rd STREET,

TUTICORIN - 628 008.

Ph : 0461 - 2375468 Cell : 93456 - 75468

**FIELD OFFICE**

Bishop. V. DEVADASS

FOUNDER & GENERAL SECRETARY,

SHARING LOVE MISSION

CHRISTIAN KAMDHAR SOCIETY,

NEAR C.N.I CHURCH, DAHOD, GUJARAT - 389 151

Ph : 02673 - 325468 Cell : 093774 - 45468

email : info@shalommission.in website : www.shalommission.in

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை (02.04.2011)

சகோ. T. அருள்தாஸ் (இயேசு ஆறுதல் அளிக்கிறார் ஊழியங்கள், மார்த்தாண்டம்) அவர்கள், மார்த்தாண்டம் பகுதியில் ஷாலோம் பிரதிநிதியாக செயல்படும் பேரா. P. ஜார்ஜ் அவர்களுடன் நமது ஷாலோம் பணித்தளத்திற்கு அவ்வப்போது வருகை தந்து கூட்டங்களை நடத்தி ஊழியங்களை நிறைவேற்றுவார்கள். அன்பு சகோ. T. அருள்தாஸ் அவர்கள் நமது ஷாலோம் ஊழியங்களை அதிகமாக நேசித்து ஜெபித்துத் தாங்கி வருகிறார்கள். மேலும் அநேக ஆண்டுகளாக இரண்டு பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தாங்கி வருகிறார்கள்.

தற்போது அவர்கள் ஊழியத்தின் சார்பாக ஒரு சுதேச ஊழியரைத் தாங்க முன் வந்துள்ளார்கள். அதன்படி **02.04.2011** அன்று குஜராத் வரம்கேடா கிராமத்தில், அர்ப்பணித்து ஊழியம் செய்துவரும் சுதேச ஊழியர் சகோ. நவல்சிங் பாரியா அவர்களை மார்த்தாண்டம், தாசையா திருமண மண்டபத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் வைத்து, Rev. இம்மானுவேல் (முன்னாள் சேகர குரு) அவர்கள் தலைமை தாங்கி ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார்.

சகோ. நவல்சிங் பாரியா அவர்கள் தமது சாட்சியை பகிர்ந்து கொண்டார்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக மேலாளர் சகோ. சாம் குணசீலன் அவர்கள் சுதேச ஊழியரின் சாட்சியை மொழியாக்கம் செய்தும், நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். மார்த்தாண்டத்தில் முன்னேற்றப்பணியாளராக ஊழியம் செய்துவரும் சகோ. செல்வதுரை மற்றும் நம் ஷாலோம் பிரதிநிதிகள் பேரா. P. ஜார்ஜ், சகோ. கிங்பெர்ட், ஆகியோர் வாழ்த்துரை செய்தி வழங்கினார்கள். சகோ. T. அருள்தாஸ் அவர்கள் தேவ செய்தி வழங்கினார்கள். மேலும் சகோ. T. அருள்தாஸ் அவர்கள் வருகின்ற ஜுன் மாதத்திலிருந்து மேலும் இரண்டு ஆதிவாசி சிறுவர்களைத் தாங்க முன் வந்தமைக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும், அவர்கள் செய்து வரும் இயேசு ஆறுதல் அளிக்கிறார் ஊழியங்களையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக!

***ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலகம்***

***Bro. G. Selvadurai***

Kalikal House, Near A.G.Church
Gnaramvilai, Pacode.P.O K.K Dist, Tamil Nadu 629168

Cell : 94876-89869

சென்னையில் தொடர்பு கொள்ள...

***Bro. B. Ebenezer Daniel***

New no:38 Old No:76A, 2nd Floor, 3rd St, Gill Nagar,
Choolaimedu, Chennai, Tamil Nadu 600 094

Cell : 934 44-75468

இயேசு அழைக்கிறார்

# சுகமளிக்கும் ஆராதனை



இடம்

**விக்டோரியா தொடக்கப்பள்ளி**

சத்திரம் பஸ் ஸ்டாப் அருகில்,
தூத்துக்குடி.

நாள்
**07.05.2011,**
*சனிக்கிழமை*

நேரம்
**மாலை 7.00 மணி**



தெய்வச் செய்தி

## *Sis. வஹிதா தேவதாஸ்*

ஷாலோம் ஊழியங்கள், குஜராத்.

இந்த சுகமளிக்கும் ஆராதனைக்காக ஜெபியுங்கள்.
யாவரும் தவறாமல் பங்கு பெறுங்கள்

தொடர்புக்கு : இயேசு அழைக்கிறார் ஜெப மையம், தூத்துக்குடி.

**Ph : 2377577, 98430 - 39220, 94431 62710**

**இணையதளத்தில் நமது**

**அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்**



*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த "அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்" இதனை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்;* ஏசாயா 40:31

# ஷாலோம் உபவாச ஜெபம்

| நாள் | நேரம் |
|---|---|
| **07.05.2011**<br>**சனிக்கிழமை** | **காலை 9.30 மணி முதல்**<br>**மதியம் 1.00 மணி வரை** |

இடம்

**ஷாலோம் தலைமை அலுவலகம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.

தேவ செய்தி :

## Sis. வஹிதா தேவதாஸ்

(அன்பு பகிர்வு இயக்கம், குஜராத் பணித்தளம்)



*தேசத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும் ஜெபிக்க உபவாசத்துடன் குடும்பமாக அனைவரும் கலந்து கொண்டு ஜெபிக்க அன்பாய் அழைக்கிறோம்.*

***உங்களது ஜெபக்குறிப்புகளுக்காக விசேஷமாக ஜெபிக்கப்படும்!***

குறிப்பு : ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் இந்த உபவாச ஜெபம் நடைபெறும்.

தொடர்பு :
**அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.
போன் : 0461 – 2375468, செல் : 9345675468

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *மே மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| **06.05.2011** | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி **– 8.** செல் : **99940–25696** |
| **07.05.2011** | முதல் சனி | காலை **9.30** மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், **5/168**, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி **– 8.** செல் : **9345675468** |
| **21.05.2011** | மூன்றாம் சனி | மாலை **6** மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி **– 8.** செல் : **9843379994** |
| **25.05.2011** | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் **10**வது தெரு, தூத்துக்குடி **– 8.** செல் : **9789569737** |

"¨¡§V ¡ÚûTÙPu E]dÏ CWeÏúYu
Guß LojRWô¡V Eu AhTo ùNôpÛ¡\ôo." **ஏசாயா 54 : 8**

# Àp B§Yô£ UôQYo பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **கீதா பட்டேல்** |
| தந்தையின் பெயர் | : | கவுதம் பட்டேல் |
| பிறந்த நாள் | : | 02.05.2003 |
| படிக்கும் வகுப்பு | : | 3rd Std., |
| சொந்த ஊர் | : | கமனியா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

இவளது தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். அசுத்த ஆவிகளை வணங்கி வந்ததால் இவருடைய பிள்ளைகள் பிறந்து இறந்துவிடும். வியாதியினாலும் அதிக கஷ்டப்பட்டார்கள். ஷாலோம் ஊழியத்தைக் குறித்து கேள்விப்பட்டு ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். இவருடைய குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபை விசுவாசிகளாக இருந்து வருகிறார்கள்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–**

நன்றாக படிப்பாள். ஆலயத்திற்கு தொடர்ந்து செல்பவள், எல்லாருக்கும் கீழ்ப்படிபவள்.

**ஜெபியுங்கள்:–**

நன்றாக படிக்க தேவன் ஞானத்தை கொடுக்கவும், இவளுடைய பெற்றோர் செய்கிற வேலைகளை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :– V. Shylin,** K.K. Dist

**இந்த மாணவரைப் போல 243 மாணவ மாணவியருக்கு மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் தேவை.**

# பெண்களுக்கான சிறப்புக் கூடுகைகள்

கடந்த ஏப்ரல் மாதத்தில் மத்திப்பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள ஏரியாக்களில் ஐந்து திருச்சபைகளில் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூடுகை நடைபெற்றது. 08.04.2011–ல் சஜேலி என்ற கிராமத்திலும், 12.04.2011–ல் வாவடி என்ற கிராமத்திலும், 13.04.2011 –ல் டிக்கிடி கிராமத்திலும், 14.04.2011 கேடாவத் என்ற கிராமத்திலும், 15.04.2011 –ல் ஜாம்புகேடா கிராமத்திலும் இந்தக் கூடுகைகள் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் மொத்தம் சுமார் 520 பெண்கள் பங்குபெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். அனைத்துக் கூடுகைகளிலும் பெண்கள் உற்சாகமாக பல மணி நேரம் தேவனை ஆடிப்பாடி துதித்து மகிழ்ந்தார்கள். ஆராதனை வேளைகளில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் பலமாய் இறங்கியது. தங்களுடைய சொந்த ஜனங்கள் இரட்சிக்கப்படும்படியாகவும், ஆதிவாசி சிறுபிள்ளைகளின் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்படும்படியாகவும், 7000 கிராமங்களில் சபைகளும், ஊழியர்களும் எழுப்பப்படும்படியாகவும் மிகவும் பாரத்தோடு கண்ணீரோடு தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார்கள். **"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார்"** என்ற தலைப்பில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். செய்தியின் மூலம் கலந்து கொண்ட அனைவரும் தேவ அசீர்வாதம் பெற்றார்கள். கடைசி ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவர் அனைவர் மீதும் பலமாய் இறங்கினார். அனைவரும் அபிஷேகத்தினாலும் வல்லமையினாலும் நிரப்பப்பட்டாரக்ள். சரீரத்தில் சுகத்தையும் ஆத்துமாவில் விடுதலையும், அற்புதங்களையும் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

## உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தாலோ, மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் உங்களது முகவரியில் திருத்தங்கள், மாற்றங்கள் அல்லது புது முகவரியை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும், நமது தலைமுறையில் இரட்சிக்கப்பட்டு தேவனண்டையில் திரும்ப ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus** **(MBA II Year)** **Brighton Shalom** **(B.Tech Media Final Year)** **Joy Shekinah** **(Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- இந்த மே மாதம் நமது பணித்தளங்களில் வழக்கம்போல் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு CBC (Children Bible Class) நடத்த ஜெபித்து தீர்மானித்துள்ளோம். இதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதை தேவன் ஆசீர்வதிக்கவும், அநேக சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வாதங்களைப் பெறவும், ஜெபியுங்கள்.
- நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து 07.05.2011 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளிக்கும் உபவாச ஜெபத்திற்காகவும், இதில் அநேகர் பங்கு பெறவும், இந்த ஜெபம் ஊழியங்களுக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி விக்டோரியா தொடக்கப் பள்ளியில் வைத்து 07.05.2011 சனிக்கிழமை அன்று மாலை 7.00 மணிக்கு சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளிக்கும் இயேசு அழைக்கிறார் சுகமளிக்கும் ஆராதனைக்காக ஜெபியுங்கள். இந்தக் கூடுகையில் அநேகர் பங்கு பெறவும், சுகம் பெற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.
- மார்த்தாண்டத்தில் நமது ஷாலோம் கிளை அலுவலகத்தில் வைத்து 07.05.2011 சனிக்கிழமை அன்று சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் செய்தியளிக்கும் ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதிக்கவும், இன்னும் அதிகமாக தேவ பிள்ளைகள் பங்குபெறவும், இந்த கூடுகையின் மூலம் அநேகர் மிஷனெரி தரிசனம் பெறவும் ஜெபியுங்கள்.
- 11 & 12 ம் தேதிகளில் தூத்துக்குடி மாவட்டம் நீல் புரத்திலுள்ள பரி. திரித்துவ தேவாலயத்தில் சகோ. தேவதாஸ் அவர்கள் செய்தியளிக்கும் கன்வென்ஷன் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். கூட்டத்தில் சகோதரரை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், குஜராத் பணித்தள அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- நமது பணித்தளங்களிலுள்ள கல்வியறிவு இல்லாத முதியோர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதியோர் கல்வித்திட்டம் வெற்றியடையவும், அநேகர் கல்வியறிவு பெற்று, இதன் மூலம் வேத அறிவை பெறவும் ஜெபியுங்கள்.

நல்ல போராட்டத்தைப் போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன்,
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
2 தீமோ 4:7

## *வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்.....*



பெயர் : **திருமதி. எலிசபெத் ராணி**

பிறப்பு : **18.03.1968**, இறப்பு : **01.04.2011**
வயது : **42**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நமது ஷாலோம் ஊழியத்தின் பிரதிநிதியாக செயல்பட்டு வந்த சகோதரி எலிசபெத் ராணி அவர்கள் **01.04.2011** அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

இந்த சகோதரி விழுப்புரம் மாவட்டம் நெல்லிக்குப்பம் மற்றும் திருக்கோயிலூர் – சந்தைப்பேட்டை பகுதிகளில் ஆசிரியையாக பணிபுரிந்து கொண்டே, பகுதி நேரமாக தேவனுக்கென்று உண்மையும் உத்தமமுாக ஷாலோம் பிரதிநிதியாக அவர்கள் பகுதியிலும், அவர்கள் பணியாற்றிய பள்ளிகளிலும் காணிக்கைகளை சேகரித்து அனுப்பி வந்தார்கள். அவர்களது உடல்நிலை சரியில்லாமல் கடந்த **01.04.2011** அன்று தேவனண்டை சேர்ந்தார்கள். பெற்றோரை பிரிந்து வாடும், அவர்களது மகன்கள் **சகோ. ராபின்** (12ம் வகுப்பு) **சகோ. நெல்சன்** (6ம் வகுப்பு) ஆகிய இருவருக்காவும், இவர்களது எதிர்காலத்திற்காவும், படிப்பிற்காவும் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் அவர்களது தந்தை **சகோ. மார்டின் கமால்** மற்றும் சகோதரர்கள் **சகோ. ஜாண்,** மற்றும் **சகோ. சார்லஸ்** ஆகியோருக்காவும் ஜெபியுங்கள்.

சகோதரி எலிசபெத் ராணி அவர்கள் குடும்பத்திலும், பணிபுரிந்த இடத்திலும் அநேகருக்கு ஆசீர்வாதமாகவும், இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

# சார்லெட் லோட்டி மூன்



***மிஷனெரி முன்னோடிகள்***

**சார்லெட் லோட்டி மூன், 1840 டிசம்பர் 12ம் தேதி** அன்று அமெரிக்க தேசத்திலுள்ள வியுமௌண்ட், வெர்ஜினியாவில் பிறந்த பெற்றோருக்குச் செநா;தமான பெரியப் பழத்தோட்டத்தில் வளர்ந்தார். இவருக்கு உடன் பிறந்த 6 சகோதர, சகோதரிகளும் உண்டு. இவர்கள் செல்வந்தர்களாக இருந்தபடியால் ஆசிரியர்கள், வீட்டிற்கு வந்து கல்வி கற்று கொடுத்தனர். லோட்டி மூன் 12 வயதாயிருக்கும் போது, வியாபாரம் விஷயமாக வெளியூர் சென்ற தகப்பனார் திடீரென நெஞ்சுவலியால் இறந்துவிட்டார். லோட்டி மூன் கல்வியில் மிகுந்த தேர்ச்சியுற்று முதல் மாணவியாக திகழ்ந்தார்.

கீரீன்வில்லி ஆலய போதகர் பிராடஸ் 1858ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நற்செய்தி கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்தில் லோட்டி மூன் ஆண்டவராகிய இயேசுவுக்கு தன் வாழ்வை ஒப்புக் கொடுத்து, அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன்பின் தன்னுடைய முதுகலைப்பட்டப் படிப்பை முடித்து, ஆலயக்காரியங்களிலும் சபை ஊழியங்களிலும் உற்சாகமாக பங்குபெற்று, போதகருக்கு உதவியாக இருந்தார். ஆலயத்திற்கு வந்த பாப்திஸ்து (Baptist) மிஷனெரிகளின் பணித்தள அறிக்கை லோட்டி மூனை மிகவும் கவர்ந்தது. மேலும் அது அவருடைய ஊழிய பாரத்தையும் அதிகரிக்கச் செய்தது. போதகரின் மிஷனெரி அறைகூவல் செய்தி லோட்டி மூனின் அழைப்பை பிப்ரவரி 1873—ல் உறுதி செய்தது. எனவே மிஷனெரியாக சீனா புறப்பட்டார். "கோர்டாரிகா" என்ற நீராவி கப்பல் மூலம் மற்ற மிஷனெரிகளுடன் புறப்பட்ட லோட்டி மூன் 1873 அக்டோபர் 7ம் நாள் ஷாங்காய் பட்டினம் வந்து சேர்ந்தார்.

1878ஆம் ஆண்டு லோட்டி மூன், பெண்களுக்கு என ஒரு பள்ளியை டெங்சௌ பட்டணத்தில் ஆரம்பித்தார். பள்ளி மாணவர்கள் மூலம் பெற்றோருக்கு சுவிசேஷம் அளிக்க இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தினார். 13 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி வேகமாக வளர ஆரம்பித்தது. லோட்டி மூன் தன் வாழ் நாட்களில் பெரும்பாலான நேரத்தை கிராம ஊழியத்தில் செலவிட்டார். வீடு வீடாக சென்று பிள்ளைகளை பொது இடத்திற்கு அழைத்து வேதாகம கதைகள், பாடல்கள், வேதவினாக்கள் மூலம் தேவனுடைய செய்தியை பகிர்ந்து வந்தார். இவர் சுவிசேஷத்தை காலை முதல் இரவு வரை பொது இடங்களில் இருக்கும் மண்டபம், தெருக்கள் ஆகிய இடங்களில் கழுதையின் மேல் ஏறிச் சென்று வெயில், மழை, பனி, என்று பாராமல் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். ஜெபத்திலும், வேதம் வாசிப்பதிலும் தேவனோடு தரித்திருப்பதிலும் தேவ பெலனை பெற்றுக் கொண்டார்.

1885ஆம் ஆண்டு பிங்கு நாட்டை சர்வே செய்வதற்காக சென்றார். பிங்கு மக்கள்

தொகை உலகில் 12வது இடத்தை வகிக்கிறது. ஒரு மாதத்திற்குள் பிங்குவி துணை பணித்தளம் உருவாக்கப்பட்டது. இந்த மக்கள், மத அடிப்படையில் வாழ்ந்தாலும் அவர்கள் இருதயம் சுவிசேஷத்திற்கு திறந்திருந்தது. இவர் இந்த நாட்டில் சில மாதங்களிலே 33–க்கும் மேற்பட்ட இடங்களில் சுற்றித் திரிந்து சுவிசேஷம் அறிவித்தார். இவர் வட சீனாவில் சிறந்த ஊழியம் செய்து 10,000க்கும் மேற்பட்ட மக்கள் கிறிஸ்துவை அறிய உழைத்தார்.

1890–ல் ஷாலிங்கில் கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு உருவானது. கிறிஸ்தவத்திற்கு முதலாவது ஆதரவுக் கொடுத்தவர், ஹோஜீபங்க் ஆவார். இவரை இவரது உறவினர்கள் கட்டி வைத்து அடித்தனர். ஆனாலும் அந்நிய தெய்வங்களை வணங்க மறுத்தார். லீஜீஷோஜீடிங் எனும் இளம் விசுவாசியை அவருடைய சகோதரர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கும்படி கூறி துன்புறுத்தி தலை முடியைப் பிய்த்து எறிந்தனர். ஆனாலும் அவர் கிறிஸ்துவை மறுதலிக்காமல் உறுதியாக இருந்தார். லோட்டி மூன் எதிர்ப்பாளர்களுடன் பேசி, முதலில் என்னைக் கொன்றுவிட்டு, விசுவாசிகளை தொடுங்கள் என உறுதியாக இருந்தபடியால் எதிர்ப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

39 ஆண்டுகள் பணியாற்றிய லோட்டி மூன் இறுதியில் மிகவும் பெலவீனப்பட்டார். உடன் ஊழியர்கள் அவரை அமெரிக்கா கொண்டு செல்ல திட்டமிட்டனர். 1912ம் வருடம், டிசம்பர் மாதம் 24ம் தேதி கூடியிருந்தோரை அருகில் அழைத்து, சீன முறைப்படி புன்முறுவலுடன் வணக்கம் செலுத்தி தேவ இராஜ்யம் சேர்ந்தார்.

---

## SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## `ôúXôm F¯V BÛs LôX AeLj§]WôL AûZl×

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி ஷாலோம் ஊழியத்தின் ஆயுள் கால அங்கத்தினராக இணையும்படி அன்புடன் அழைக்கிறோம். இந்தத் திட்டத்தில் இணைந்தவுடன் உங்களுக்கு சிறப்புச் சான்றிதழ், மாதம்தோறும் பத்திரிகை, மற்றும் வருடம் ஒருமுறை ஊழிய வளர்ச்சிக் குறித்த சிறப்பு அறிக்கை அனுப்பப்படும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் வரும் நிதியினால் மாதாந்திர செலவினங்கள் ஏற்ற காலங்களில் செய்யப்படவும், நிதி நெருக்கடி நேரங்களை சமாளிக்கவும், ஒரு சிறப்பு வைப்பு நிதியாக வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வருட இறுதிக்குள்ளாக, குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்கப்பட ஜெபித்து வருகிறோம். முதலாவது நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அங்கத்தினராக இணையுங்கள், மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் குறைந்தது 5–லிருந்து 10 பேருக்காவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்த சிறப்பு ரசீதுகளும், ஊழிய அறிமுக அறிக்கைகளும் அனுப்புகிறோம். நீங்கள் இந்தத் திட்டத்திற்காக உதவி செய்து, பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரைவாக கட்டப்பட உதவுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADASS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

நமது தமிழ்நாட்டில் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளில் ஒவ்வொரு சுற்று எண்ணிக்கையும் முடித்தவுடன், வாக்கு எண்ணிக்கை மையத்தில் உள்ள கம்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு, சென்னை தேர்தல் ஆணைய கட்டுப்பாட்டு அறையில் உள்ள கம்ப்யூட்டரிலும் அதே நேரத்தில் தெரிந்து கொள்ளும் வகையில் இன்டர்நெட் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம் என் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் தெரிவித்துள்தார்.

---

தமிழகம் முழுவதும் பள்ளி செல்லா குழந்தைகள் குறித்த கணக்கெடுப்புப் பணி கடந்த 15ம் தேதி துவங்கியது. இப்பணியில் ஆசிரியர், பயிற்றுனர்கள், சிறப்பு ஆசிரியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பள்ளி ஆசிரியைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் குழந்தைகள் குறித்த கணக்கெடுப்பு மற்றும் பள்ளிச் செல்லாத குழந்தைகளை புகைப்படமும் எடுக்கின்றனர். இதில் கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 6,034 குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இதில் 3,888 குழந்தைகள் உறைவிட பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளர். எஞ்சியவர்களுக்கு குறுகிய கால கல்வி பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

---

விண்வெளிக்கு மனிதனுடன் முதல் விண்கலத்தை ஏவிய 50வது ஆண்டை ரஷ்யா கொண்டாடுகிறது. அதன் ஒரு பகுதியாக, செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் நகரில் பாரீசின் புகழ்பெற்ற ஈபிள் டவர் வடிவிலான மாடல் ராக்கெட்டை விண்ணில் ஏவி கொண்டாடினர்.

நன்றி : www.dinakaran.com

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



# கிராம ஆலயம்

# மேஹந்திகேடா

## மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்டத்திலுள்ள மிகவும் உள்ளடங்கிய கிராமம் மேஹந்திக்கேடா. பீல் மக்கள் நிறைந்து வாழும் இக்கிராம மக்கள் அந்தகாரத்திலும் பிசாசின் அடிமைத்தனத்திலும் சிக்குண்டு காணப்படுகின்றனர். சாராயத்தை குடித்துவிட்டு திருடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் இம்மக்கள் அசுத்த ஆவிகளை வணங்கி மந்திரவாதிகளின் ஆலோசனையின்படி நடப்பவர்கள். இவர்களுக்கு இயேசுவைப்பற்றி ஒன்றும் தெரியாது. உண்மையான தெய்வ அறிவும் உலகம் அறிவும் இல்லாத பரிதாபமான சூழ்நிலையில் வாழும் இம் மக்களுள் ஒருவர்தான் சகோ. பாலுசிங் பாரியா.

அசுத்த ஆவிகளை வணங்கியதால் சகோ. பாலுசிங் பாரியா முழு குடும்பமாக பிசாசின் வல்லமைக்கு ஆட்பட்டு மிகவும் அலைக்கழிக்கப்பட்டனர். பாலுசிங் பாயின் சகோதரர் திடீரென்று வியாதிப்பட்டார். பல்வேறு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றும், மந்திரவாதிகளிடம் சென்றும், வியாதி குணமாகவில்லை. இத்தகைய சூழ்நிலையில் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு அந்தர்வேலியாவில் நடைபெறும் ஷாலோம் ஆராதனைக் கூட்டத்திற்கு கொண்டு சென்றார்கள். அங்கு ஷாலோம் ஊழியர் இயேசுவைப்பற்றி கூறி ஜெபித்தார். ஜெபித்த நேரத்திலேயே தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலமாக சகோ. பாலுசிங் பாரியா முழுக் குடும்பமும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது. சகோ. பாலுசிங் பாரியா தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்று இயேசுவின் பிள்ளையானார். தொடர்ந்து வேதவாசிப்பிலும் ஜெபிப்பதிலும் வளர்ந்த சகோ. பாலுசிங் பாரியா தேவன் பரிசுத்த ஆவியாலும் வல்லமையினாலும் நிரப்பினார். தான் பெற்ற விடுதலையைத் தன் ஜனங்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாரத்துடன் தேவ வழி நடத்துதலின்படி தன் வாழ்க்கையை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். தன்னுடைய வீட்டிலேயே ஜெபக்கூட்டத்தை ஆரம்பித்தார். ஷாலோம் ஊழியத்தின் மூலம் குறைந்த கால வேதாகமப் பயிற்சி பெற்று ஊழியம் செய்த இவரது ஊழியத்தின் மூலம் 25க்கும் அதிகமான மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஆராதனைக்கு வருகிறார்கள். ஆண்டவரை ஆராதிக்க ஆலயம் தேவை என்பதை உணர்ந்த பாலுசிங் தன்னுடைய நிலத்தை காணிக்கையாகத் தர, தேவ நாமத்திற்கு மகிமையாக ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த டாக்டர் சுரேஷ் J. பால் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கட்டப்பட்ட நான்காவது கிராம ஆலயமாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம்**
**நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

# கன்வென்ஷன் கூட்டங்கள்

நாள்

**11 & 12 மே - 2011**
**புதன் & வியாழன்**

நேரம்

**தினமும் மாலை**
**7.00 மணி**

இடம்

**பரி. திரித்துவ தேவாலய வளாகம்**

நீல்புரம், தூத்துக்குடி மாவட்டம்

தேவ செய்தி

**Rr. Rev. Dr.V. தேவதாஸ்**

அவர்கள்

(அன்பு பகிர்வு இயக்கம், குஜராத்.)



**கூட்டங்களுக்காக ஜெபிக்கவும்,**

**தவறாமல் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கிறோம்!**

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss